விலை ரூ. 10/=

வடக்கின் முதலாவது நாளிதழ்
ஈழநாடு
Eelanadu
05.08.2020 புதன்கிழமை

# கடல் அட்டை பிடிக்க தடை கோரிய வழக்கு தள்ளுபடி

வடமராட்சி, ஓக. 05

யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறி கடல் அட்டை பிடிப்பதை தடை செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த மனுவை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று தள்ளுபடி நேற்று தள்ளுபடி செய்தது.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கில் தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோதமாக வாடி அமைத்து கடல் அட்டை பிடிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

02

# இன்று பாராளுமன்ற தேர்தல்! வாக்களிக்கத் தவறாதீர்கள்!!

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 05

இலங்கையின் 9 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் இன்று புதன்கிழமை இடம்பெறுகின்றது. காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வாக்காளர்கள் வாக்களிக்க முடியும். எனவே, மக்கள் அனைவரும் தமது வாக்கு உரிமையை கட்டாயம் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

02



## 2030 ஆம் ஆண்டில் 5 இல் ஓர் இலங்கையர் 60 வயதுக்கு மேற்பட்டவர்

கொழும்பு, ஓக. 05

2030 ஆம் ஆண்டளவில் 5 இல் ஒருவர் 60 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பார் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் சராசரியாக ஆண்களை விட அதிகமாக இருப்பதால் அவர்களே பெரும்பான்மையினராக இருப்பர் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பல ஆண்டுகளாக சுகாதார துறையில் பெரும் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும்கூட பாலியல் மற்றும் இனப்பெருக்க

02

## தொடரும் விதிகள் மீறல்!

யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், தேர்தல் அமைதி நாளான நேற்றும் நேற்று முன்தினமும்கூட கட்சிகள், சுயேச்சைக்

02

## தேர்தல் கடமைகளில் இருந்து சிரேஷ்ட அலுவலர்கள் நீக்கம்

கொழும்பு, ஓக. 05

நுவரெலியாவில் தேர்தல் கடமைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட 10 சிரேஷ்ட தேர்தல் அலுவலர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ரோஹன புஸ்பகுமார இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ரோஹன புஸ்பகுமார மேலும் கூறுகையில்-

இந்த அதிகாரிகள் 10பேரும் அரசியல் கட்சியொன்றின் கூட்டங்களில் கலந்துகொண்டிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே

02

## ஒரு வாக்காளருக்கு தலா ரூ.523 செலவு!

கொழும்பு, ஓக. 05

இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர் ஒருவருக்காக 523 ரூபா செலவிடப்படுவதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தலுக்காக தேசிய தேர்தல் ஆணைக்குழு கிட்டத்தட்ட 8.5 பில்லியன் ரூபாக்களை செலவிடுகிறது. இலங்கை வரலாற்றில் அதிக செலவீனம் கொண்ட தேர்தலாக இது அமைந்துள்ளது. பொதுத்

02

## விசேட பாதுகாப்புத் திட்டம் நாடு முழுவதும் நடைமுறை

கொழும்பு, ஓக. 05

நாடாளுமன்றத் தேர்தலுக்கான விசேட பாதுகாப்புத் திட்டம் நாடு முழுவதும் அமுலில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்று எடுத்துச் சென்றபோது கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

நேற்றுக் காலையிலிருந்து தேர்தல் கடமைகள் முடியும் வரை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சோதனைச் சாவடிகள் நாடு முழுவதும் இருக்கும்.

வாக்குப்பதிவு இன்று காலை 07 மணிக்கு ஆரம்பமாகின்றது. மாலை

02

## வன்முறை நிகழக்கூடிய இடங்களில் விசேட அதிரடிப்படையினர் கடமை!

கொழும்பு, ஓக. 05

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ள நிலையில் வன்முறைகள் நிகழக்கூடும் என அடையாளப் படுத்தப்பட்டுள்ள இடங்களில் விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வன்முறைகள் இடம்பெறும் எதிர்பார்க்காத போதிலும் பொலிஸார் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விசேட அதிரடிப்படையினரை ப

02



## வாக்களிப்பது எப்படி?



கொழும்பு, ஓக. 05

முறையாக வாக்களிப்பது எவ்வாறு என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெளிவூட்டினார்.

நீங்கள் விரும்பும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்திற்கு முன்பான புள்ளடியிடுங்கள். வேறு குறியீடுகளை இடவேண்டாம்.

ஒன்றை விட அதிக புள்ளடிகள் இருந்தால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும்.

02

## வாக்களிப்பது கட்டாயமானது

வவுனியா, ஓக. 05

வாக்களிப்பது அனைவரதும் கடமை. வாக்களிக்காதிருப்பது மடைமை என்று வவுனியா மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

ஆள்பவனை தீர்மானிக்க வேண்டியது ஆளப்படுபவனே. அவ்வாறு தீர்மானிப்பதற்கு உள்ள ஒரே ஒரு

02

## இலங்கை படைகளுக்கே இந்தியாவில் முதலிடம்!

கொழும்பு, ஓக. 05

இந்தியாவில் உள்ள வெளிநாட்டுப் படையினருக்கு பயிற்சி வழங்கும் நிலையங்களில் 50 வீதத்துக்கும் அதிகமான இடங்கள் இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்காக ஒதுக்கியுள்ளதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் புதிய பாதுகாப்பு ஆலோசகர் விகாஸ் சூட் மற்றும் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன ஆகியோருக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது விகாஸ் சூட், இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அத்மில் நிஷாந்த

02

**உண்மைகள் நேர்மையானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இலங்கை....

உலுகேதென்னே, இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இரு நாடுகளின் பாதுகாப்புப் படையினருக்கு இடையில் சம்பிரதாயபூர்வமான நட்புறவை அதிகரித்தல், பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் இந்திய தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

## இன்று பாராளுமன்ற....

இம்முறை தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் தகுதி பெற்றுள்ளனர். 2019 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவின் அடிப்படையிலேயே இந்த எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

196 உறுப்பினர்களை தெரிவதற்கான இந்தத் தேர்தலில் அரசியல் கட்சிகளின் சார்பில் 3 ஆயிரத்து 652 பேரும், சுயேச்சைக் குழுக்களின் 3 ஆயிரத்து 800 பேருமாக 7 ஆயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

**ஏற்பாடுகள் பூர்த்தி**

தேர்தலில் வாக்களிப்பதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் நேற்று மாலையுடன் பூர்த்தியாகின.

வாக்களிப்புக்கு வசதியாக 12 ஆயிரத்து 985 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஆயிரத்து 459 அரச பேருந்துகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடவுள்ளன.

**சுகாதார நடைமுறைகள்**

கொரோனா தொற்று அச்ச சூழல் நிலவுவதால் இம்முறை தேர்தலில் சுகாதார நடைமுறைகள் மிக இறுக்கமாக பின்பற்றப்படவுள்ளன.

வாக்காளர்கள் அனைவரும் கட்டாயமாக முகக் கவசம் (மாஸ்க்) அணிந்து வர வேண்டும்.

வாக்களிப்பு நிலையத்துக்கு செல்லும் முன்பாக கை கழுவும் திரவமிட்டு கைகளை நன்கு கழுவிய பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுவர்.

வாக்களிக்கக் காத்திருக்கும்போது ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பின்பற்றுவது அவசியம்.

ஆளடையாளத்தை உறுதிப்படுத்த அதிகாரிக்கு முகத்தை காண்பிக்க வேண்டும். அதே சமயம் ஆளடையாள சான்றாதாரத்தை வாக்காளர் தமது கைகளிலேயே வைத்திருக்க முடியும். அதனை அதிகாரியிடம் வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்

வாக்காளர்கள் தமது வாக்காளர் அட்டையுடன் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் அட்டையையும் கொண்டு செல்வது கட்டாயம். தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச்சீட்டு, தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கிய தற்காலிக அடையாள அட்டை என்பவற்றில் ஏதேனும் ஒன்றை காட்டி வாக்களிக்க முடியும்.

**அங்கவீனமுற்றவருக்கானது**

அங்கவீனர்கள் தமக்கு உதவியாக ஒருவரை வாக்களிப்பு நிலையத்துக்கு அழைத்துச் செல்ல முடியும். அவர் 18 வயதைப் பூர்த்தி செய்தவராகவும் - வேட்பாளராக அல்லாதவராகவும் இருக்க வேண்டும். அல்லது கட்சி, சுயேச்சை குழுவின் முகவராக இருக்கக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

**தேர்தல் முடிவுகள்**

வாக்களிப்பு நிறைவடைந்ததும் வாக்குப் பெட்டிகள் அனைத்தும் சீல் செய்யப்பட்டு வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். வாக்குப் பெட்டிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு மறுநாள் காலை வாக்கு எண்ணும் பணிகள் இடம்பெறும்.

தேர்தல் முடிவுகளை 6 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னரும் விருப்பு வாக்கு முடிவுகளை 7 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னரும் வழங்க எதிர்பார்க்கப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## 5இல் ஓர்....

சேவைகளில் பல குறைபாடுகள் - தடைகள் காணப்படுகின்றன. இவை இன்னமும்கூட சவாலாகவே உள்ளன.

வயது, இயலாமை, பாலின அடையாளம், பாலியல் நோக்குநிலை, இனம், பொருளாதார நிலை சமூக வர்க்கம் மற்றும் பிற சமூக, கலாசார, பொருளாதார தடைகள் இனப்பெருக்க சுகாதார நலனில் பெரும் சவால்களை ஏற்படுத்துகின்றன.

தற்போதைய கொரோனா தொற்று சூழல்கூட ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கக்கூடிய குழுக்களின் பாகுபாடுகளை அதிகப்படுத்தியுள்ளன என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

## ஒரு வாக்காளருக்கு....

தேர்தலில் வாக்களிக்க இம்முறை 16,263,885 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். இவ்வாறு தகுதி பெற்ற ஒவ்வொரு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்த தலா 523 ரூபா வீதம் செலவாகியுள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கூறியுள்ளது.

அத்துடன் வாக்களிப்பு மூலமாகவும் தேசியப் பட்டியல் ஊடாகவும் தேர்தெடுக்கப்படும் 225 பிரதிநிதிகளுக்கு தலா 37,777,778 ரூபா செலவிடப்படும் எனவும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடல் அட்டை....

இதனால், உள்ளூர் மீனவர்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கினர்.

இது தொடர்பில் கடந்த வருடம் தொடரப்பட்ட வழக்கில் கடல் அட்டை பிடிப்புக்கு தடை விதித்து தீர்ப்பளித்தது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம்.

இந்நிலையில், இந்தத் தடை உத்தரவை நீடிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் முன்னிலையாகி வழக்காடியிருந்தார் பிரபல சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன்.

வழக்கு விசாரணைகள் முடிவடைந்த நிலையில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பளித்த நீதிவான் சயிலவன் காயத்திரி, "கடல் அட்டை பிடிப்பதற்கான ஒப்புதலை பருத்தித்துறை சேர்ந்த ஐந்து மீனவ அமைப்புக்கள் நீரியல்வளத் திணைக்களத்தினருக்கு வழங்கியிருக்கிறது. இதனால், குறித்த விடயத்தை நீரியல் வளத்திணைக்களத்தினரே கையாண்டு தீர்வைக் காண முடியும் என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்கிறேன்" என்றார்.

## தொடரும்....

குழுக்கள் பல தேர்தல் விதிகளை மீறியுள்ளன என்று தெரியவருகின்றது.

பல கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் பல வாக்குக்காக பணம் வழங்கல், அன்பளிப்பு வழங்கல் என்று தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன. இதேபோன்று மதுபான விருந்துகள், மதுபானங்கள் வழங்கல்களும் இந்நாட்களில் தாராளமாக இடம்பெற்றுள்ளன.

தவிர, அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் சின்னங்கள், மற்றும் வேட்பாளர்களின் படங்கள், விருப்பு இலக்கங்கள் பதித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டும், துண்டுபிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டும் உள்ளன.

வேட்பாளர்கள் தொடர்பில் அபகீர்த்தியை ஏற்படுத்தும் அல்லது அவர்களின் ஆதரவு வாக்குகளை திசை திருப்பும் விதத்திலான அநாமதேய துண்டுப் பிரசுரங்களும் பரவலாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவை குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் அளிக்கப்பட்டும் அவை தொடர்பில் முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

# சட்டமீறல்களில் ஈடுபடுபவர்களை படம்பிடிப்பதற்கு வீடியோ கமெரா



கொழும்பு, ஓக. 05

தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபடுபவர்களை வீடியோ பதிவு செய்ய நடவடிக்கையெடுத்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர, அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் அதற்கேற்ப கமெராக்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கை நடந்தால் இது நீதிமன்றத்தின் முன் வீடியோ ஆதாரமாக பயன்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

இதற்கிடையில், நாடு முழுவதுமுள்ள 12,984 வாக்களிப்பு நிலையங்களின் பாதகாப்புக்காக ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் தலா 2 பொலிசார் வீதம், 25,998 பொலிஸார் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

64 பிரதான வாக்கெண்ணும் மையங்களின் பாதுகாப்பிற்காக- ஒவ்வொரு மையத்துக்கும் 52 பொலிஸார் வீதம், 3328 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வாக்கெண்ணும் மையத்திற்கும் வெளியே 45 விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், நாடு முழுவதும் 121 வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# புத்தளம் களப்பிலிருந்து மீனவரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஓக. 05

புத்தளம் களப்பு பகுதியிலிருந்து மீனவர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் மணல்குண்டு பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

கடந்த 2ஆம் திகதி புத்தளம் களப்பில் மீன்பிடிக்கச் சென்ற தனது தந்தை விடு திரும்பவில்லை எனவும், தந்தையின் தெப்பம் மற்றும் தந்தை எடுத்துச் சென்ற மின்சார டோர்ச் லைட் என்பன களப்பு பிரதேசத்தில் காணப்படுவதாகவும் அவரது மகனால் பொலிஸில் முறைப்பாடு ஒன்றும் செய்யப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

## விசேட பாதுகாப்புத்....

5 மணியளவில் வாக்களிப்பு நிலையங்களின் பணிகள் முடிவுக்குக் கொண்டு வரப்படும். அதன்பின்னர் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும். இதன்போதும் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படும்-என்றார்.

## வாக்களிப்பது....

விருப்பு இலக்கங்களுக்கு வாக்களிக்க விரும்பினால், உதாரணமாக 71 ஆம் இலக்கத்துக்கு வாக்களிக்க விரும்பினால் 71 ஆம் இலக்கத்தின் மீது புள்ளடியிடுங்கள்.

நீங்கள் இன்னுமொரு வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்பினால் அந்த இலக்கம் 81 ஆக இருந்தால் 81 ஆம் இலக்கத்தின் மீது புள்ளடியிடுங்கள்.

உங்களுக்கு இன்னுமொருவருக்கு வாக்களிக்க முடியும். அந்த இலக்கம் 91 ஆக இருந்தால் அந்த இலக்கத்தின் மீது புள்ளடியிடுங்கள்.

ஆகக் கூடுதலாக மூவருக்கே உங்களால் விருப்பு வாக்கை அளிக்க முடியும்.

ஒருபோதும் உங்கள் விருப்பு வாக்குகளை மூவரை விட அதிகமானவர்களுக்கு அளிக்கவேண்டாம்.

விருப்பு வாக்குகளை அளிக்காவிட்டாலும் உங்கள் வாக்கு நிராகரிக்கப்பட மாட்டாது. எனினும், கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்களிக்காமல் விருப்பு வாக்குகளை மாத்திரம் அளித்தால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும்.

முதலில் வாக்கையும் இரண்டாவதாக விருப்பு வாக்கையும் அளிக்க வேண்டும்.

## தேர்தல்....

அவர்களை தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்களுக்கு எதிராக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது-என்றார்.

## வாக்களிப்பது....

வாய்ப்பு தேர்தலே. அந்தத் தேர்தலில் உங்களிடம் உள்ள ஜனநாயக ஆயுதம் வாக்கே. அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி உங்களை ஆளப்போகின்றர்களை நீங்கள் தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும் நிலையத்திற்குச் செல்லாவிட்டால் அதன் கருத்து உங்களை ஆளப்போகின்றவர்களை நீங்கள் அல்லாது வேறு ஒருவர் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்போகின்றீர்கள் என்பதாகும்.

அதாவது உங்கள் உரிமையை நீங்களே மறுக்கின்றீர்கள் என்பதேயாகும். ஆகவே வாக்களிப்பு நிலையத்திற்கு கட்டாயம் சென்று வாக்கினை செலுத்துங்கள்-என்றுள்ளது.

## வன்முறை....

யன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களையே பயன்படுத்தப் போவதாகவும் படையினரைப் பயன்படுத்தப் போவதில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த தேர்தல்களின்போது இருந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, குருநாகல், ஹம்பாந்தோட்டை, அம்பாறை, நவலப்பிட்டி, புத்தளம் போன்ற பகுதிகளில் முக்கிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்த இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறப்பு குழுக்களை நிறுத்தியுள்ளதாக பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

ஈழநாடு
Eelanadu
05.08.2020 புதன்கிழமை
சார்வரி, ஆடி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# மீண்டும் ஐந்து ஆண்டுகள்?

தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை மீண்டுமோர் ஐந்து ஆண்டுகள் தீர்மானிக்கப் போகின்றது. கடந்த ஐந்து ஆண்டுகள் முற்றிலும் தோல்வியில் முடிந்துவிட்டது. அது ஏன் தோல்வியில் முடிந்தது? கடந்த ஐந்து ஆண்டுகளும் ஒரேயொரு விடயத்திற்காகவே வீணாக்கப்பட்டது. அதாவது, புதியதொரு அரசியல் யாப்பை தங்களால் கொண்டுவர முடியுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பியது. மக்கள் கருத்தறியும் குழு, இடைக்கால அறிக்கை, உப குழு அறிக்கைகள், இறுதியாக அரசியல் யாப்பு நகல் - என பல விடயங்கள் மிகவும் ஆர்ப்பாட்டமாக இடம்பெற்றன. ஆனால், இறுதியில் அனைத்துமே விழலுக்கிறைத்த நீரானது. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கையின் மீதான சர்வதேச சமூகத்தின் பார்வை மாற்றமடைந்தது. தமிழர்களுக்கு சாதகமாக இருந்த சர்வதேச அழுத்தங்கள் அதன் வீரியத்தை இழந்துபோயின. ஒரு பிரச்சினையை சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் தீர்த்துக்கொள்ள முடியுமென்று கூறும்போது, சர்வதேச அழுத்தங்கள் தேவையற்ற ஒன்றாகிவிடும். 2009இற்கு பின்னரான சூழலில், சர்வதேச அழுத்தங்கள் மட்டுமே, தமிழ் மக்களுக்கு சாதகமாகவிருந்த ஒரேயொரு விடயமாகும். ஆனால், அதுவும் கடந்த ஐந்து வருடங்களில் கணிசமாக நீர்த்துப்போனது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், சர்வதேச சமூகத்திற்கும் இந்தியாவிற்கும் சில வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அதாவது, விடுதலைப் புலிகளால்தான் பிரச்சினைகளை சுமூகமாக தீர்க்க முடியாமல் இருக்கின்றது. அவர்கள் இலங்கைத் தீவில் பலமாக இருக்கும் வரையில் தம்மால் பிரச்னைகளை தீர்க்க முடியாது. இந்த அடிப்படையில்தான் மஹிந்த ராஜபக்ஷ அரசின் யுத்தத்திற்கு மேற்குலகம் ஆதரவளித்தது. ஆனால், போர் வெற்றிக்கு பின்னர், வழங்கிய வாக்குறுதிகள் எவையுமே நிறைவேற்றப்படவில்லை. போர் முடிந்ததும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை நான் முழுமையாக அமுல்படுத்துவேன் என்று மஹிந்த உறுதியளித்திருந்தார். இது தொடர்பான ஆவணங்களை ஐக்கிய நாடுகள் சபையின் இணையத்தளத்தில் பார்க்கலாம். ஆனால், அவர் எதனையும் செய்யவில்லை. இதனால் சர்வதேச ரீதியில் மஹிந்த அரசாங்கம் தொடர்பில் கடுமையான அதிருப்திகள் எழுந்தன. இந்த பின்புலத்தில்தான் அமெரிக்கா இலங்கையின் மீது பொறுப்புக்கூறல் தொடர்பான பிரேரணையை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றியது. இதன் மூலம் இலங்கையின் பொறுப்புக்கூறல் சர்வதேச விவகாரமாக மாற்றப்பட்டது. ஆனால், ஆட்சிமாற்றமொன்று ஏற்பட்டதைத் தொடர்ந்து, அனைத்தும் சடுதியாக மாற்றமடைந்தது. புதிய அரசாங்கம் இலங்கையை சர்வதேச அழுத்தங்களிலிருந்து மீட்டெடுக்கும் வேலையை கச்சிதமாக செய்தது. இந்த நிலையில்தான் 2018 உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் இலங்கை தொடர்பான இந்திய மற்றும் - மேற்குலக அவதானங்கள் அனைத்தையும் தலைகீழாக்கியது. இப்போது தமிழர்களுக்கு தீர்வும் இல்லை - தமிழர்களுக்கு சாதகமாக இருந்த சர்வதேச அழுத்தங்களும் இல்லை. மீண்டும் தமிழர் அரசியல் கையறு நிலையில். ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து கிடைத்த ஐந்து ஆண்டுகள் தமிழ்த் தேசிய அரசியலை நீர்த்துப் போகச் செய்ததுடன் தமிழர் அரசியலை மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே கொண்டு வந்திருக்கின்றது. இனிவரப்போகும் ஐந்து ஆண்டுகள் எப்படியிருக்கப் போகின்றது? மக்கள் எடுக்கும் முடிவில்தான் அடுத்துவரவுள்ள ஐந்து ஆண்டுகளில் மீண்டும் தோற்பதா அல்லது கடந்த ஐந்து ஆண்டுகளில் இழந்தவற்றை மீட்டெடுப்பதா என்பது தீர்மானிக்கப்படும். தோல்விகளிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ளாது விட்டால் மீண்டும் தோல்விகளைத்தான் சந்திக்க நேரிடும்.

# ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு விசேட விமான சேவை

கொழும்பு, ஓக. 5

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு எதிர்வரும் 7 மற்றும் 9ஆம் திகதிகளில் விசேட விமான சேவை இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் மல்ராஜ் டி சில்வா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்தும் இலங்கைக்கும் இடையிலான விசேட விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. மேலும், இலங்கையில் கொரோனா பாதிப்பு அதிகரிப்பதால் வெளிநாடுகளுக்கான விமான சேவைகள் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டன. எனினும், அங்குள்ள வைத்தியசாலை மற்றும் பொது இடங்களில் தனிமைப்படுத்தும் இடத்தைப் பொறுத்து பயணிகள் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த மே மாதத்தில் இருந்து இயக்கப்பட்ட 06 விசேட விமானங்களில் சுமார் 1,800 பேர் இலங்கைக்கு வந்துள்ளனர். தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் துணைத் தூதரகங்களில் 21 ஆயிரம் பேர் இலங்கைக்கு வருவதற்கு முன்பதிவு செய்துள்ளனர்.

தற்போது டுபாயிலிருந்து இலங்கைக்கு விமான சேவைகள் மீண்டும் இயக்கப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த விமானங்களில் கர்ப்பிணிகள், மாணவர்கள், மருத்துவ அவசர தேவையுடையோர், வயதானவர்கள், வேலையிழந்தவர்கள் உள்ளிட்டோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது. எனவே, நிலைமையைப் பொறுத்து பயணிகள் வருவதற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

கடந்த மார்ச் 01ஆம் திகதிக்கு பின்னர் விசா இரத்துச் செய்யப்பட்டவர்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு வருகின்றனர். யாராவது அபராத தொகை கட்டவேண்டிய கட்டாயம் இருந்தால் அவர்களுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்திடம் அந்தத் தொகையை இரத்துச் செய்ய கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

விசாவை இரத்துச் செய்தவர்கள், விசா காலாவதியானவர்கள் உள்ளிட்டோர் சொந்த ஊருக்குத் திரும்ப எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை அபராதம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று ஐக்கிய அரபு இராச்சிய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# தேர்தல் கால அவசர இடரை எதிர்கொள்ள விசேட பிரிவு

கொழும்பு, ஓக. 05

பொதுத் தேர்தலுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் எதிர்வரும் சில தினங்களில் அவசர இடர்நிலை ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு 24 மணித்தியாலம் செயற்படக்கூடிய விசேட செயற்பாட்டு பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளை உள்ளடக்கி உடனடியாக செயற்படக்கூடிய விசேட திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்கள் தொடர்பாக இந்த விசேட பிரிவுகளுக்கு அறிவிப்பதற்காக விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 0702117117, 011-3668031, 011-3668032, 011-3668087, 011-3668016, 011-3668025

இதற்கு மேலதிகமாக துரித தொலைபேசி இலக்கமான 117 என்ற இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# இலங்கையர்களை நாட்டுக்கு அழைப்பது மீண்டும் நிறுத்தம்

கொழும்பு, ஓக. 05

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் மீண்டும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 08 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், எதிர்வரும் 08 ஆம் திகதி டுபாயிலுள்ள 660 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

அதன் பின்னர், மாலைதீவு, அவுஸ்திரேலியா, கட்டார், ஓமான், பஹ்ரைன், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே கூறினார்.

# சமூக ஊடகங்களில் சட்டவிரோத பிரசாரம்

கொழும்பு, ஓக. 05

தேர்தல் பிரசாரங்கள் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்த நிலையில் தேர்தல் சட்டங்களை மீறிய வகையில் சமூக ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக 940 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

கடந்த இரண்டு மாதங்களில், சமூக வலைத் தளங்களில் தேர்தல் சட்டங்களை மீறிய 3,444 சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சுகாதாரச் சட்டங்களை மீறி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டமை தொடர்பாக 2,483 முறைப்பாடுகளும் மேலும் வெறுக்கத்தக்க பேச்சு தொடர்பாக 30 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன.

அத்துடன் 75 துன்புறுத்தல் சம்பவங்கள் மற்றும் 45 பெண் வேட்பாளர்கள் தவறாக சித்தரிக்கப்பட்டமை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன-என்றார்.

செய்திகள்

# கிளிநொச்சி வைத்தியசாலையின் ஒட்சிசன் உற்பத்தி மையம் சேதம்!

## அதற்குள் மணல் கொட்டி விசமிகள் அடாவடி




கிளிநொச்சி, ஓக. 05

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் ஒட்சிசன் உற்பத்தி செய்யும் மையத்தில் உள்ள பெறுமதிமிக்க கருவிகளுக்குள் மணல் இடப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் கடந்த வாரம் வைத்தியசாலையின் பிராணவாயு உற்பத்தி மையத்தில் உள்ள அதிக விலை மதிப்புள்ள கருவிகளின் உள்ளே சிலரால் மணல் வீசப்பட்டு அந்த மையம் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. வடக்கில் இரண்டே இரண்டு வைத்தியசாலைகளிலேயே இவ்வாறான உற்பத்தி மையம் காணப்படுகின்றது.

அத்துடன் 2011ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வரும் இந்த மையத்திலிருந்தே மாவட்டத்தில் உள்ள சகல வைத்தியசாலைகளுக்குமான ஒட்சிசன் வாயு பெற்றுக்கொள்ளப்படுகிறது. இந்த நிலையில் அந்த ஒட்சிசன் வாயு உற்பத்திக் கருவிக்குள் மணல் இடப்பட்டு அவை செயலிழக்கச் செய்யப்பட்ட சம்பவம் ஒரு திட்டமிடப்பட்ட நடவடிக்கையே சந்தேகம் தெரிவித்துள்ள பிராந்திய சுகாதாரத் திணைக்களம், இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டது.

மேலும் வைத்தியசாலையில் உள்ள மின்பிறப்பாக்கி இயந்திரம் மின் விநியோகம் தடைப்படும்போது தானாக இயங்குகின்ற நிலையில் தற்போது இல்லை எனவும் இதுவும் வைத்தியசாலையின் நடவடிக்கைகளுக்குப் பெரும் ஆபத்தானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வாக்காளர் அட்டைகளை பணம் கொடுத்து வாங்கியவர்கள் கைது

கொழும்பு, ஓக. 05

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பணம் கொடுத்துப் பெற முயன்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் இரவு பேருவளைப் பகுதியில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நால்வர் கொண்ட குழு, 5000 ரூபா கொடுத்து வாக்காளர் அட்டைகளை பெற முயன்றுள்ளது. இதன்போது இருவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் இருவர் தப்பியோடியுள்ளனர்.

இதன்போது பொலிஸாரால் அவர்கள் பயன்படுத்திய காரொன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## லங்காபுர பிரதேச செயலகத்தின்

# பாதுகாப்பு ஊழியருக்கும் மகளுக்கும் கொரோனா

கொழும்பு, ஓக. 05

பொலனறுவை - லங்கா புர பிரதேச செயலகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கும் அவரின் மகளுக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த இருவருக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தரின் ஐந்து வயது மகள், விசேட பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் எனச் சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

லங்காபுர பிரதேச செயலகத்தில் மாத்திரம் 12 பேர் கொரொனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவருடன் தொடர்பைப் பேணிய 19 குடும்பங்களைச் சேர்ந்த 90பேர் பொலனறுவையில் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புள்ள அதிகாரிகளுக்கு ஆப்பு

## சொத்துக்களை அரசுடமையாக்க முடிவு

கொழும்பு, ஓக. 05

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் அதிகாரிகளின் சொத்துக்களை அரசுடமையாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த அதிகாரிகள் முறையற்ற வகையில் திரட்டிய பணத்தால் சேகரித்த சொத்துக்களையே அரசுடமையாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

நிதி தூய்தாக்கல் சட்டத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான தகவல்கள் தற்போது திரட்டப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# உப பொலிஸ் பரிசோதகர் கைது!

கொழும்பு, ஓக. 05

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மேலும் ஒரு உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுடன் இணைந்து சாட்சியங்களை மறைத்தமை தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டுள்ள உப பொலிஸ் பரிசோதகரிடம் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# தூக்குத் தண்டனை வேட்பாளர் தேர்தலில் போட்டியிட அனுமதி

படுகொலைக் குற்றத்துக்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் பிரேம லால் ஜயசேகர இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படவுள்ளார்.

2015 ஜனாதிபதித் தேர் தல் காலத்தில் ஒருவரைச் சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டில் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கு தூக்குத் தண்டனை விதித்து இரத்தினபுரி உயர்நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்தது.

கடந்த 2015-ஆம் ஆண்டு 5ஆம் திகதி கஹாவத்தை பகுதியில் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவை ஆதரித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்காக மேடை அமைக்கும் பணியில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் இந்தக் கொலைக் குற்றத்துக்காக ஜயசேகரவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோதும் அவரது வேட்பு மனு செல்லுபடியாகும் என்பதால் அவர் தேர்தலில் போட்டியிட முடியும் என தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எனினும் தேர்தலில் அவர் வென்றால் என்ன செய்வது என்பது குறித்து சட்ட ரீதியாக ஆலோசனை நடத்தவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, பிரேமலால் ஜயசேகரவுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை அவர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தடையாக இருக் காது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன செயலாளர் சாகர கரியவாசம் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதியாக ஜயசேகர நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படுவார். மாவட்ட மக்களின் நலனுக்காக அவர் செயற்படுவார் எனவும் அவர் கூறினார்.

# விபத்தில் பெண் படுகாயம்




யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வேகமாக வந்த ஓட்டோ மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அடைக்கல அன்னை ஆலயத்துக்கு அருகாமையில் யாழ். நகர் நோக்கி வேகமாக வந்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டையிழந்து மதிலுடன் மோதியது.

விபத்தில் வயோதிபப் பெண்மணி ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கில்லாடி பூனை தொடர்ந்தும் சிறைக்குள்ளே!



கொழும்பு, ஓக. 05

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்பட்ட பூனை, தொடர்ந்தும் சிறைச்சாலை வளாகத்துக்குள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பூனை கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு வெளியில் இருந்து பிடிக்கப்பட்டது.

இதன்போது பூனையின் கழுத்தில் பிணைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு கிராம் ஹெரோயின் போதைப்பொருள், தொலைபேசிக்கான சிம் அட்டைகள் என்பன மீட்கப்பட்டன.

இந்தப் பூனையை பயன்படுத்தி சிறைச்சாலைக்குள் போதைப்பொருட்களைக் கடத்தும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து அது சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது.

எனினும் பூனை அங்கிருந்து தப்பிச்சென்றுவிட்டதாக நேற்று செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் அந்தப் பூனை தொடர்ந்தும் சிறைச்சாலை வளாகத்துக்குள் சுதந்திரமாக சுற்றி திரிவதாக சிறைச்சாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# தேர்தல் கடமைக்கு சென்ற அலுவலர்கள் அசௌகரியம்

வவுனியா, ஓக. 05

இன்று நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக, வவுனியா மாவட்ட செயலகத்துக்குச் சென்ற உத்தியோகத்தர்களை வவுனியா மாவட்ட செயலகம் அசௌகரியத்துக்கு உட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மாவட்ட செயலகத்துக்குள் வாகனங்களை நிறுத்துவதற்கு போதுமான இடவசதிகள் இருந்தபோதிலும், மாவட்ட செயலகத்தில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் உள்ள காமினி மகாவித்தியாலய மைதானத்தில், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களை நிறுத்தி வருமாறு உத்தியோகத்தர்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

முன்கூட்டியே இந்தத் தகவல் வழங்கப்படாமையால், கடமைக்கு சமுகமளித்த உத்தியோகத்தர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகினர்.

# காலையிலேயே வாக்களியுங்கள்!

## யாழ். அரச அதிபர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 05

வாக்காளர்கள் காலையிலேயே சென்று வாக்களிப்பை மேற்கொள்ளவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன்.

தேர்தல் தொடர்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெறவுள்ள தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்குப் பெட்டிகளுடன் சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்கள் தேர்தல் மத்திய நிலையத்திலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் 4 லட்சத்து 79 ஆயிரத்து 584 வாக்காளர்களும் கிளிநொச்சி நிர்வாக மட்டத்தில் 92 ஆயிரத்து 264 வாக்காளர்களும் மொத்தமாக யாழ் தேர்தல் மாவட்டத்தில் 5 லட்சத்து 71 ஆயிரத்து 848 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள்.

அதேபோன்று யாழ். நிர்வாக மாவட்டத்தில் 508 வாக்களிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 107 வாக்களிப்பு நிலையங்களுமாக மொத்தமாக 615 வாக்களிப்பு நிலையங்கள் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன

அதேபோன்று வாக்கெண்ணும் நிலையங்களை பொறுத்தவரை சாதாரண வாக்கெண்ணும் நிலையங்களாக யாழில் 73 நிலையங்களும் கிளிநொச்சியில்14 மொத்தமாக 103 வாக்கெண்ணும் சாதாரண நிலையங்களும் அதேபோல் 16 தபால் மூல வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் மொத்தமாக 7 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். அதற்காக 330 பேர் போட்டியிடுகிறார்கள். 19 அரசியல் கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 33 கட்சிகள் போட்டியிடுகின்றன.

இந்தத் தேர்தலில் தேர்தல் கடமைகளுக்கென 8235 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தடவை விசேடமாக சுமார் 450 உத்தியோகத்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான பணியில் அமர்த்தியுள்ளோம்.

இந்தத் தேர்தலில் சுகாதார நடைமுறைகளையும் அதனுடைய வழிகாட்டல்களையும் பின்பற்றி மேற்கொள்ளவேண்டிய கடப்பாடு காணப்படுவதன் காரணமாக அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



அதேபோல் மாற்றுத்திறனாளிகள் அந்த இடத்திற்குச் செல்வதற்குரிய ஏற்பாடுகளும் அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை நேரகாலத்துடன் சென்று வாக்களிப்பை மேற்கொள்ளவேண்டும் சுகாதார நடைமுறை மற்றும் சமூக இடைவெளியை பேணி முக கவசம் அணிந்து வாக்களிக்கமுடியும்.

யாழில் 30 பேர் தனிமைப்படுத்தலில் உள்ளார்கள். அவர்களுக்குரிய வாக்களிக்கும் சந்தர்ப்பமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 26 வாக்களிப்பு நிலையங்களில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறையை பின்பற்றுவதற்காக மேலதிகமாக சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களும் சுகாதார உத்தியோகத்தர்களும் அங்கே நியமிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அல்லது பொதுச் சுகாதார பரிசோதகர் இந்த நடைமுறையைச் செயல்படுத்தவுள்ளனர்.

வாக்காளர்கள் எந்தப் பயமுமின்றி தங்கள் வாக்குரிமையை செயல்படுத்த முடியும். அதற்குரிய சுகாதார நடைமுறைகள் சம்பந்தமான விடயங்கள் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளன.

வாக்களிமுடிந்தவுடன் வாக்குப் பெட்டிகள் தேர்தல் மத்திய நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டு 6ஆம் திகதி காலை 7 மணி அளவில் வாக்கெண்ணும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

நெடுந்தீவு பகுதி வாக்குப்பெட்டி வழமை போன்று வான் மார்க்கமாக கொண்டுவருவதற்குரிய நடவடிக்கையைத் தேர்தல் திணைக்களம் முன்னெடுத்துள்ளது. அதேபோல ஏனைய தீவு பகுதிகளுக்கான வாக்குப் பெட்டிகளும் கடற்படையின் உதவியுடன் எடுத்து வருவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளோம்.

இந்த முறை தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனவே அனைத்து மக்களும் அதிகாலையிலேயே சென்று வாக்களிக்களியுங்கள்-என்றார்.

# பொதுத்தேர்தல் பணிகளுக்கு 1,459 அரச பஸ்கள் சேவையில்

கொழும்பு, ஓக. 05

பொதுத் தேர்தல் பணிகளுக்காக 1,459 அரச பேருந்துகள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக அரச போக்குவரத்துசபை பிரதிப் பொது முகாமையாளர் ஏ. எச். பண்டுக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடு தழுவியுள்ள வாக்களிப்பு மத்திய நிலையங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுப்படவுள்ள பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பினர்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு 192 பஸ்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பொதுத்தேர்தல் பணிகளுக்கான போக்குவரத்து நடவடிக்கைகள் அனைத்தும் முழுமை பெற்றுள்ளன.

தூர பிரதேசங்களில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கு வாக்காளர்கள் செல்வதற்கு 800 பஸ்கள் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவு இடம் பெற்ற பின்னர் வாக்குப் பெட்டிகளை பாதுகாப்பான முறையில் வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் மேலதிகமாக, 61 பஸ்கள் சேவையில் ஈடுப்படுத்தப்படவுள்ளன.

வாக்குச்சாவடிகளுக்கு வாக்காளர்கள் செல்வதற்கு நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்து அரச பஸ் டிப்போக்களிலும் பஸ்கள் சேவையில் ஈடுப்படுத்தப்படவுள்ளன- என்றார்.

# வாக்காளர் அட்டைகளை பெறாதோர் கவனத்துக்கு

கொழும்பு, ஓக. 05

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இதுவரை பெறாத வாக்காளர்கள் இன்று புதன்கிழமை தபால் அலுவலங்களில் அவற்றை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தங்களுடைய பிரதேச தபால் அலுவலகத்திற்கு சென்று அடையாளத்தை உறுதிப்படுத்தி உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டையை பெற்றுக் கொள்ள முடியும் என பிரதித் தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் வாக்காளர் அட்டை இல்லாவிடினும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் தங்களது அடையாளத்தை உறுதி செய்ததன் பின்னர் வாக்களிக்க முடியும்.

# முறைப்பாடுகள் குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள்

கொழும்பு, ஓக. 05

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக தேர்தல் சட்டங்களை மீறி முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தொலைநகல் இலக்கங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணைக்குழுவினால் 9 மாகாணங்களுக்கான தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே அந்தந்த மாகாணங்களில் இடம்பெறும் முறைப்பாடுகள் குறித்து நேரடியாகப் பொது மக்களால் முறையிட முடியும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணம் - 011-2869697, கொழும்பு , 011-2869674, கம்பஹா மற்றும் களுத்துறை, மத்திய மாகாணம் - 011- 2869721, தென் மாகாணம் - 011-2869682, வட மாகாணம் - 011-2869694, கிழக்கு மாகாணம் - 011-2869709, வடமேல் மாகாணம் - 011-2869727, வடமத்திய மாகாணம் - 011-2869663, ஊவா மகாணம் - 011-2869712, சப்ரகமுவ மாகாணம் - 011-2869713 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகளை ஏற்படுத்தி முறைப்பாடுகள் குறித்து அறிவிக்க முடியுமெனத் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

# மொட்டு வெற்றி பெற்றால் பிரதமர் உடன் பதவியேற்பு

## பொதுஜன பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 05

இன்று நடைபெறும் நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன வெற்றி பெற்றால் புதிய பிரதமர் உடனடியாக பதவியேற்பார் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஓகஸ்ட் ஏழாம் அல்லது எட்டாம் திகதி தேர்தல் முடிவு வெளியாகி அதில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன வெற்றிபெற்றால், புதிய பிரதமர் உடனடியாக தெரிவு செய்யப்படுவார் என பொதுஜன பெரமுன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுஜன பெரமுன வென்றால் உடனடியாக பிரதமர் பதவியேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் பின்னர் அமைச்சர்கள் சத்தியபிரமாணம் செய்வார்கள எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான வாய்ப்புகளையும் பொதுஜன பெரமுன வட்டாரங்கள் நிராகரித்துள்ளன. தாம் தனியாகவே ஆட்சி அமைப்போம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு துப்பாக்கி வழங்க நடவடிக்கை

உயிர் அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ள சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் துப்பாக்கிகளை வழங்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத் துள்ளது.

இதன் பிரகாரம் மில்லி மீற்றர் - 9 ரக கைத் துப்பாக்கிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை , மகஸின் , கொழும்பு , நீர்கொழும்பு, பூஸா மற்றும் அக்குனுகொல பெலஸ்ஸ ஆகிய சிறைச்சாலைகளின் அதிகாரிகள் மற்றும் புலனாய்வுதுறை அதிகாரிகளுக்கு இந்த துப்பாக்கிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு துப்பாக்கிகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரிகளுக்கு விசேட பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

# தேர்தல் கடமைகளுக்காக 8,000 சுகாதார அதிகாரிகள்

கொழும்பு, ஓக. 05

பொதுத் தேர்தல் இடம் பெறும் காலப்பகுதியில் சுகாதார ஒழுங்குவிதிகளை நடைமுறைப் படுத்துவதற்காக 8,000 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதிகாரிகள் தங்களுக்குரிய பணி இடங்களுக்கு நேற்று முதல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க குறிப்பிட்டார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், சுகாதார அத்தியட்சகர்கள், நிர்வாகப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள், குடும்பநல சுகாதார அதிகாரிகள், நிறைவுகாண் வைத்தியர்கள் அடங்கலாக சுகாதார குழுவினர் தேர்தல் காலத்தில் கடமைகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங் களிலும் தலா ஒருவர் அல்லது இருவர் வீதம் சுகாதார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர் எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

வாக்களிப்பு மற்றும் வாக்கெண் ணும் நிலையங்களில் சுகாதார ஒழுங்குவிதிகள் பேணப்படுகின்றதா என்பது தொடர்பில் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினரால் கண்காணிக்கப் படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க சுட்டிக்காட்டினார்.

## இடம்பெயர்ந்த மன்னார் மக்கள் புத்தளத்தில் வாக்களிக்கலாம்

மன்னார், ஓக. 05

இடம்பெயர்ந்த மன்னார் மாவட்ட வாக் காளர்கள், புத்தளத்தில் 12 விசேட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க முடியுமென மன்னார் மாவட்டச் செயலாளரும் மன் னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான சி.ஏ.மோகன்ராஸ் தெரிவித்தார்.

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட வாக்கு எண்ணும் நிலையமான மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை யில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கையிலேயே அவர் இவ்வாறு கூறி னார்.

## முருகன் சிலை கடத்தி விற்க முயற்சி; முன்னாள் பொலிஸ் அதிகாரி கைது

திருமலை, ஓக. 05

திருகோணமலையிலிருந்து மட்டக் களப்புக்கு சட்டவிரோதமாக முருகன் சிலை ஒன்றைக் கடத்தி, விற்பனை செய்ய முயற்சித்த, கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைதாகி யுள்ளார். முருகன் சிலையும் மீட்கப் பட்டுள்ளது.

இந்தக் கைது நடவடிக்கை நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசி யத் தகவல் ஒன்றுக்கமைய, திருகோண மலையிலிருந்து மட்டக்களப்புக்கு சட்டவிரோதமாக ஐம்பொன்னிலான முருகன் சிலையைக் கடத்தி வந்து விற்க முயன்ற ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைதானவர், பொலிஸ் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட திருகோணமலை முள்ளிப்பொத்தனை யைச் சேர்ந்த 54 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புதையலில் இருந்து கிடைத்த சிலையை, ஒரு நண்பர் தனக்கு தந்தார் எனவும், அதனை விற்பதற்காக மட்டக்களப்புக்கு வந்தார் என்றும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை மட் டக்களப்புப் பொலிஸார் மேற்கொண் டுள்ளனர்.

## போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் 13 அதிகாரிகளுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஓக. 05

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பைப் பேணிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் 13 அதிகாரி களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதி வான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித் துள்ளது.

அந்த அதிகாரிகளை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று செவ் வாய்க்கிழமை உத்தரவு பிறப்பித்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி முன்வைத்த பிணை மனு கோரிக்கையையும் நீதிவான் நிராகரித்தார்.

## விமான நிலைய திறப்பு; இன்னமும் முடிவில்லை

கொழும்பு, ஓக. 05

விமான நிலையங்களை எப்போது திறப்பது என்று அரசு இன்னும் முடிவு செய்யவில்லையென விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டவர்களுக்காக ஓகஸ்ட் முதல் வாரத்தில் விமான நிலையத் தைத் திறப்பதற்கு முன்னர் தீர்மானிக்கப் பட்டபோதும் தற்போது நாட்டின் விமான நிலையங்களை மீண்டும் திறப்ப தற்கான முடிவு இன்னும் அரசால் எடுக்கப்படவில்லை.

கொரோனாத் தொற்றைத் தொடர்ந்து நாட்டின் சுற்றுலாத் துறையை மீட்டெ டுக்க ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தையும் மத்தள சர்வதேச விமான நிலையத்தையும் மீண்டும் திறக்க அரசு முன்னதாக திட்டமிட்டிருந்தது.

வெளிநாட்டிலுள்ளவர்களை அழைத்துவரும் நடவடிக்கைகள் ஓகஸ்ட் 8 ஆம் திகதி தொடங்கும் என்றும் அதன்படி ஒரு நாள் ஒரு விமானம் செயற்படும் என்றும் சுமார் 700 இலங்கையர்கள் நாளொன்றுக்கு நாடு திரும்புவர் எனவும் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, 40,000 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நாடு திரும்பக் காத்திருக்கின்றனர் என்பதோடு தற்போது வரை சுமார் 12,000 பேர் நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் சட்ட விதிமுறைகளை கட்டாயம் கடைப்பிடியுங்கள்!

### வேட்பாளர்களுக்கு கபே வலியுறுத்தல்

கொழும்பு, ஓக. 05



அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக்குழுக்களின் வேட் பாளர்கள் தேர்தல் சட்ட விதிகளைக் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டு மென கபே அமைப்பின் பணிப்பாளர் சுரங்கி ஆரியவன்ஸ தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்-

பொதுத்தேர்தலின் தற்போதைய அமைதியான காலகட்டத்தில் தேர்தல் சட்ட விதிகளை மீறிச் சில கட்சிகளின் வேட்பாளர்கள் செயற்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

மதவிழாக்களை ஏற்பாடு செய்வ தாகக் கூறிச் சிலர் பிரசார நடவடிக் கைகளை முன்னெடுத்துச் செல்கின் றனர். இவைகள் தேர்தல் சட்டங் களுக்கு முரணான செயற்பாடாகும்.

ஆகவே, நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தேர்தல் சட்ட விதிகளை மதித்து செயற்பட வேண்டி யது மிகவும் அவசியமாகும்-என்றார்.

## மதுபானசாலைகள் பூட்டு

நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானச சாலைகளும் இன்றும் நாளை யும் மூடப்படும்.

இந்தத் தீர்மானத்திற்கு எதிராகச் செயற்படும் மதுபான உரிமையாளர்க ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் படுவதுடன் விற்பனை நிலைய அனுமதிப் பத்திரமும் இரத்து செய்யப் படும். இவ்விடயம் தொடர்பான முறைப் பாடுகளைப் பொதுமக்கள் 1913 இலக்கத் தின் ஊடாக முன்வைக்க முடியும் என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று பொதுத்தேர்தல் இடம்பெற வுள்ள நிலையில், பாதுகாப்பைப் பலப் படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. வன்முறைச் சம்ப வங்கள் தோற்றம் பெறுவதைத் தவிர்ப் பதற்கு இரண்டு நாட்கள் மதுபான சாலைகள் மூடப்படவேண்டும் எனத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மது வரித் திணைக்களத்துக்கு எழுத்து மூல மாக அறிவித்ததைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'இலங்கைத் தமிழும் தமிழரும்' ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம் (Zoom) செயலி வாயிலாக 20 நாள்கள் இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் எட்டாவது நாளாகிய இன்று (05.08.2020 புதன்கிழமை) மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை முனைவர் ந. அரங்கராசன் - இலங்கையில் தொல்காப்பிய, சங்க இலக்கியக் கற்கை என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

Zoom meeting ID : 477 159 8996

pass word : wts

## வாக்குப் பெட்டிகளுடன் பயணித்த பஸ் விபத்து

கொழும்பு, ஓக 05

பாராளுமன்றத் தேர்தலுக்காக காலி மாவட்டத்தின் உடுகம தேர்தல் மத்திய நிலையத்துக்கு வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளாகி யுள்ளது.

காலி- உடுகம வீதியின் ஹியார் பிரதேசத்தில் வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ்ஸும் ஓட்டோ வொன்றும் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதென அக்மீமன பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஓட்டோச் சாரதி காயங்களுடன், கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

செய்திகள்







## யாழ். வாக்குச் சாவடிகளுக்கு வாக்குப்பெட்டிகள் சென்றன

கொழும்பு, ஓக. 08

இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்யும் பொதுத் தேர்தல் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்குப்பெட்டிகள் அனுப்பிவைக்கும் பணி நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ். தேர்தல் மாவட்ட வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மத்திய நிலையத்திலிருந்து நேற்றுக் காலை 9.15 மணி முதல் அனுப்பிவைக்கப்பட்டன.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 508 வாக்களிப்பு நிலையங்கள் உள்ளன.

இம்முறை தேர்தலில் ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 5 லட்சத்து 34 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலுக்கமையவே இம்முறை தேர்தல் நடைபெறவுள்ளதாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரோனா பரவலுக்கு மத்தியிலும் ஓகஸ்ட் 05ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படும் என ஜூன் மாதம் 10ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவித்திருந்தார்.

இதனையடுத்து பொதுத் தேர்தல் தொடர்பான கூட்டங்களை நடத்துதல், வீடு வீடாகச் செல்லுதல், துண்டறிக்கைகள் விநியோகித்தல், விளம்பர பலகைகளைக் காண்பித்தல், சுவரொட்டிகளைக் காண்பித்தல், தேர்தல் தொடர்பான விளம்பரம் செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் அனைத்துக்கும் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# புதிய நாடாளுமன்றம் ஓகஸ்ட் 20 இல் கூடும்!

கொழும்பு, ஓக. 05

இலங்கையின் 8ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் ஓகஸ்ட் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இதுபற்றி அறிவிக்கும் அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன் தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டது.

எனினும் நாடாளுமன்றம் கூட்டப்படும் நேர ஒழுங்கு அறிவிக்கப்படவில்லை.

இன்று இடம்பெறும் பொதுத் தேர்தலின் ஊடாகத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்டு நாட் டின் 9ஆவது நாடாளுமன்றம் கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசியல் அமைப்பொன்றை ஆரம்பிக்கின்றார் மங்கள சமரவீர!

கொழும்பு, ஓக. 05

பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகும் முன்னர் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

கட்சி அரசியல் சம்பந்தப்படாத இளைஞர், யுவதிகளை இணைத்து அரசியல் அமைப்பொன்றை ஏற்படுத்த உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

உண்மையான தேசப்பற்றாளர்கள் என அந்த அமைப்புக்கு பெயரிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த அமைப்புக்கு பிரபல அரசியல்வாதிகளின் ஆசியும் கிடைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்முறை தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல் செய்திருந்த மங்கள சமரவீர, பின்னர் நாடாளுமன்ற அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்ததுடன் தனக்கு விருப்பு வாக்கை வழங்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.





## 7 மாவட்டங்களில் டெங்கு அபாயம்

கொழும்பு, ஓக. 05

டெங்கு நோய் பரவும் அபாயமுள்ள மாவட்டங்களாக இலங்கையின் ஏழு மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை தேசிய டெங்கு நோய் தடுப்புப் பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் அருண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

நாட்டில் தற்போது சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இந்த நிலையில் டெங்கு நோய் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்து காணப்படுகிறது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 23934 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்-என்றார்.

## தேர்தல் முடிவு நாளை நள்ளிரவுக்கு முன்னர்

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 05

தேர்தல் முடிவுகளை 6ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் வழங்க எதிர்பார்த்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேநேரம் விருப்பு வாக்கு முடிவுகளை 7ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னரும் வழங்க எதிர்பார்த்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கான வாக்கெடுப்பு இன்று இடம்பெறவுள்ளது. ஒரு கோடி 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் இம்முறை வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலுக்கு அமையவே தேர்தல் நடைபெறவுள்ளதாக சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 3652 வேட்பாளர்களும் சுயாதீன குழுக்களைச் சேர்ந்த 3800 வேட்பாளர்களும் போட்டியிடவுள்ளனர்.

மேலும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திகாமடுல்லை, திருகோணமலை, குருணாகல், புத்தளம், அநுராதபுரம், பொலனறுவை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய 22 தேர்தல் மாவட்டங்களிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் சார்பில் 7 , 452 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலைகளின் பாதுகாப்பு அதிரடிப்படையினரின் கையில்

கொழும்பு சிறைச்சாலைகளின் பாதுகாப்புக் கடமைகளுக்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விடயம் குறித்து உத்தியோபூர்வ அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சு வெளியிடவேண்டுமென சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உப்புல்தெனிய கோரிக்கை விடுத்துள்ளார்.

அதாவது வெலிக்கடை, மகஸின், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைகள் மற்றும் பெண்கள் சிறைப் பிரிவுகள் ஆகியவற்றுக்கு இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று பூஸா மற்றும் அகுனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் விசேட அதிரடிப்படையினரை ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 7,452 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில்!

கொழும்பு, ஓக. 05

இன்று நடக்கும் தேர்தலில் 225 பிரதிநிதிகளை நேரடியாகவும், தேசியப்பட்டியல் ஊடாகவும் தெரிவு செய்ய, 7,452 பேர் களத்தில் குதித்துள்ளனர். 40 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் சார்பில் இவர்கள் களமிறங்கியுள்ளனர்.

மக்களின் வாக்குகளில் இருந்து நேரடியாக 196 பேரும், போனஸ் ஆசனங்கள் மூலம் 29 பேரும் நாடாளுமன்றம் செல்லவுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசில் கட்சிகளின் சார்பில் 3,682 பேர் போட்டியிடுகிறார்கள். சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 3,800 பேர் போட்டியிடுகிறார்கள்.

2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக 16,263,885 பேர் தகுதி பெற்றுள்ளனர். இம்முறை வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களை அதிகமாகக் கொண்ட மாவட்டமாக கம்பஹா மாறியுள்ளது. அங்கு 17,85,964 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் 13,48,787 பேரும் கண்டி மாவட்டத்தில் 11,29,100 பேரும் தகுதி பெற்றுள்ளனர்.

வடக்கின் முதலாவது நாளிதழ்
ஈழநாடு
Eelanadu

# ‘வாக்கு’ என்ற ஆயுதத்தை தவறாமல் பயன்படுத்துங்கள்

## பவ்ரல் அமைப்பு அறிவுறுத்து

கொழும்பு, ஒக. 05

நாட்டினதும், இளம் தலைமுறையினரதும் எதிர்காலத்தை தீர்மானிக்கும் விதமாகவே பொதுத்தேர்தல் காணப்படுகிறது. எனவே, வாக்காளர்கள் ஒருமுறைக்கு, இரண்டு முறை சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

சிறந்த அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்க சிறந்த தரப்பினரை மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்வது குடிமக்களின் முதலாவது கடமை எனக் குறிப்பிட்டு பவ்ரல் அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், “9 ஆவது பாராளுமன்றத்துக்கான மக்கள் பிரதிநிதிகளை ஜனநாயக முறையில் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு தோற்றம் பெற்றுள்ளது. தெரிவு செய்யப்படும் மக்கள் பிரநிதிகள் பொறுப்புடனும் ஒழுக்கமாகவும் செயற்பட்டால் மாத்திரமே நாட்டின் எதிர்காலம் சிறப்பானதாக அமையும். அரசாங்கம் கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டால் மாத்திரம் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இடம்பெறும் பொதுத்தேர்தல் நாட்டின் எதிர்காலத்தை மாத்திரமல்ல எதிர்கால தலைமுறையின் முன்னேற்றத்தையும் தீர்மானிக்கும் ஒன்றாக அமைய வேண்டும். வாக்காளர்கள் ஒரு கட்சிக்கும், வேட்பாளர்களுக்கும் வாக்களிக்கும் போது நாட்டின் எதிர்காலத்தை ஒருமுறைக்கு பதிலாக இருமுறை சிந்தித்து வாக்குரிமையை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

போட்டியிடும் வேட்பாளர் கடந்த பாராளுமன்றத்தின் உறுப்பினராக பதவி வகித்து இருந்திருந்தால் அவர் பதவி வகித்த காலத்தில் மக்களின் நலன் குறித்து பாராளுமன்றத்தில் செயற்பட்ட விதம், நாட்டின் மீதும் கிராமத்தின் மீதும் கொண்டிருந்த பற்று ஆகிய பொது விடயங்களை வாக்காளர்கள் நிச்சயம் ஆராய வேண்டும்.

வாக்குரிமை பலமானதொரு ஆயுதம் அதனை பொதுமக்கள் முறையாக பயன்படுத்த வேண்டும் குறைகளை நிராகரித்து சிறந்த தூய்மையான அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்க சிறந்த தரப்பினரை மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யுங்கள். அதுவே குடிமக்களின் முதலாவது கடமை”, என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அநுராதபுர மக்களின் குருதியில் கலந்த ஈயம்!

அநுராதபுரம் மாவட்டத்தின் சில கிராமங்களின் மக்களின் குருதியில் ஈயம் அடங்கி இருப்பது பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் உணவு கட்டுப்பாடு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மருத்துவர் ஆனந்த ஜயலால் தெரிவித்துள்ளார்.

இந்த மக்களின் குருதியில் ஒரு டெசிலீடருக்கு 3.9 மைக்ரோ கிராம் அளவில் ஈயம் இருப்பதாக பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக இந்த மக்களுக்கு சுவாச குழாய் உபாதை, சிறுநீரகம் செயலிழப்பு, உயர் இரத்த அழுத்தம் போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றது.

குருதியில் ஈயம் கலந்துள்ளமையால் பிள்ளைகளின் அறிவு மட்டம் குறைவடையும் ஆபத்தும் உள்ளது. உணவு, குடிநீரில் உள்ள ஈயமே இவ்வாறு குருதியில் கலந்துள்ளது என ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களை தெரிவு செய்து இந்த பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நபர்களை தெரிவு செய்து இந்த பரிசோதனைகளை ஆரம்பிக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாற்றுப்பாலினத்தவர் தொடர்பான கவிந்தவின் கருத்துக்கு கண்டனம்

கொழும்பு, ஒக. 05

மாற்றுப்பாலின சமூகத்தவர் மீது வெறுப்பை உமிழும் விதமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மருத்துவருமான கவிந்த ஜயவர்த்தனவினால் வெளியிட்ட கருத்தை இலங்கை மருத்துவ அமைப்பு மற்றும் இலங்கை உளவள ஆலோசகர்கள் கல்லூரி என்பன பகிரங்கமாகக் கண்டிக்க

வேண்டுமென்று மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கலாக 100 தனிநபர்கள் கடிதமொன்றின் மூலம் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜயவர்த்தன அண்மையில் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது சம பால், இரு பாலுறவாளர்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூகம் தொடர்பான கேள்வியொன்றுக்கு அவர்கள் மீது வெறுப்பை விதைக்கும் வகையிலான பதிலை வழங்கியிருந்தார்.

இதனையடுத்து சமூகவலை தளங்களில் கவிந்த ஜயவர்த்தனவின் கருத்திற்கு எதிராகக் கடுமையான கண்டனங்கள் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் தனது கருத்திற்காக மன்னிப்புக் கோரினார்.

இந்நிலையில் மருத்துவரான கவிந்த ஜயவர்த்தன இரு பால் மற்றும் சமபாலுறவாளர்களைத் தாக்கி வெளியிட்ட கருத்தைப் பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தி 100 தனிநபர்கள் கையெழுத்திட்ட கடிதமொன்று இலங்கை மருத்துவ அமைப்பிற்கும் இலங்கை உளவள ஆலோசகர்கள் கல்லூரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# ஒளிரும் இலங்கையின் அரிய படம்!

## நாசா வெளியிட்டது



சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து ஜூலை 24 அன்று எடுக்கப்பட்ட ஒளிப்படத்தில் இலங்கையும், இந்தியாவின் பிரகாசமான ஒளிரும் தெற்கு முனையும் அழகாக தென்படும் காட்சியொன்றை நாசா வெளியிட்டுள்ளது.

நாசா விண்வெளி வீரர்களான பொப் பெஹன்கென் மற்றும் டக் ஹர்லி ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இரண்டு மாதங்கள் கழித்த பின்னர் ஒகஸ்ட் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவர்கள் பூமியை வந்தடைந்தனர்.

ஆனால், நாசா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் என்ற விண்வெளி ஆய்வு தொழில்நுட்பங்கள் நிறுவனம், ஏற்கனவே மற்றொரு குழுவினரை அடுத்த மாதம் சுற்றுப்பாதையில் செலுத்த திட்டமிட்டுள்ளன.

முதன்முதலில் மனிதர்களால் இயக்கப்பட்ட விண்வெளி ஆய்வு தொழில்நுட்பங்கள் நிறுவனத்தின் பயணத்தின் போது பெஹன்கென் மற்றும் டக் ஹர்லி ஆகியோரால் எடுக்கப்பட்ட சிறந்த புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

அதில் ஜூலை 24 அன்று சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படமொன்றில் இலங்கையும், இந்தியாவின் பிரகாசமான ஒளிரும் தெற்கு முனையும் காட்டப்பட்டுள்ளன.

விண்மீன்கள் நிறைந்த வானமும் வளிமண்டல பளபளப்பும் பூமியின் அடிவானத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

# சீனாவில் இருந்து மர்மப் பொதிகளில் அமெரிக்கர்களுக்கு தாவர விதைகள்?

வாஷிங்டன், ஒக. 05

அமெரிக்க மாநிலங்கள் எங்கும் பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு தாவர விதைகள் உள்ளடங்கிய மர்மக் கடிதப் பொதிகள் கிடைத்துள்ளன என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவில் இருந்து அனுப்பப்பட்டவை என்று நம்பப்படும் இப்பொதிகளில் காணப்படும் விதைகளைப் பயிரிடவோ அன்றி தரையில் வீசவோ வேண்டாம் என்று அமெரிக்க மக்களை அந்நாட்டு அதிகாரிகள் எச்சரித்திருக்கின்றனர்.

வாஷிங்டன், லூஸியானா, வேர்ஜீனியா, கென்சாஸ் போன்ற அமெரிக்க மாநிலங்கள் பல வற்றினதும் விவசாய சேவைப் பிரிவுகள் தமது பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களுக்கு இந்த மர்ம விதைகள் குறித்து அறிவுறுத்தும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

காய்கறிகள், பூங்கன்றுகள், மூலிகைகள் போன்றவற்றின் விதைகள் சிறிய பொதிகளில் இடப்பட்டு கடிதம் மூலம் பெரும் எண்ணிக்கையானோரின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பொதிகளில் சீன எழுத்துக்கள் காணப்படுவதை அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்டிருக்கும் படங்களில் அவதானிக்க முடிகிறது.

கொரோனா வைரஸ் நெருக்கடிக்குப் பின்னர் மக்களிடையே வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் ஆர்வம் அதிகரித்திருப்பதால் இந்த மர்ம விதைகளை இலவசமாகப் பெற்ற அமெரிக்கர்கள் அவற்றை விதைத்துப் பராமரிக்கத் தொடங்கி உள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவை சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி பயிரினங்களை நாசம் செய்யக்கூடிய ஆக்கிரமிப்புத் தாவர இனங்களின் விதைகளாக இருக்கலாம். உள்ளூர் தாவரங்களுக்கு நோயைப்பரப்பும் தன்மையைக் கொண்டிருக்கலாம். அத்துடன் கால்நடைகளுக்கும் பாதிப்பை உண்டு பண்ணலாம் என்று அமெரிக்காவின் ஒஹியோ மாநில பல்கலைக்கழகத்தின் விவசாயத் துறை நிபுணர்கள்




எச்சரித்திருக்கின்றனர்.

விதைகளை இணையச் சந்தைகளில் விற்கும் முகவர்களின் வியாபார உத்தியா அல்லது அமெரிக்காவுக்குள் நச்சு விதைகளையும் ஆபத்தான விவசாயக் களைகளையும் பரப்புகின்ற சீனாவின் சதியா இதன் பின்னணி என்பதைக் கண்டறிவதில் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

கொரோனா வைரஸ் அனர்த்தத்தை அடுத்து அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே முரண்பாடுகள் முற்றித் தீவிரமடைந்து புதியதொரு பனிப் போர் யுகம் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இலவச பத்திரிகை விநியோகம்!

ஈழநாடு நாளிதழை இலவசமாக பெற்றுக் கொள்ள விரும்பும் சனசமூக நிலையங்கள் தமது விபரங்களை குறிப்பிட்டு கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

**கடிதங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:**

**இல. 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
**பகல்**
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
விஜய் தேவரகொண்டா மற்றும் ராஷ்மிகா மந்தனா நடிப்பில்



கீதா கோவிந்தம்
சித்தார்த், தமன்னா மற்றும் பலர் நடிப்பில் கொஞ்சம் இஷ்டம் கொஞ்சம் கஷ்டம் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : அந்த நாலு பேர்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்
**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN Music

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஒய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : நல்லூர் கந்தன் 11 ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு



10.00 மணி : நல்லூர் கந்தன் 12 ஆம் நாள் காலைத் திருவிழா நேரலை
11.30 மணி : பக்திமலர்
**பகல்**
12.30 மணி : திருவிழா
4.30 மணி : நல்லூர் கந்தன் 12ஆம் நாள் மாலைத் திருவிழா நேரலை
**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : நல்லூர் கந்தன் 12ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
**பகல்**
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்




6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்




9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) அரசியல் விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சுத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு
**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.08.2020 அன்று வெளியிடப்பட்டது.